



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யா மொழி திருச்சியில் மலைக்கோட்டை சறுக்குப்பாறை பகுதியில் வாகனம் நிறுத்துமிடம் திறப்பு மற்றும் மலைக்கோட்டை, திருச்சி தாயுமானசுவாமி திருக்கோயில் ரூ.57.80 இலட்சம் மதிப்பீட்டில் அம்மன் புதிய மரத்தேர் செய்வதற்கான திருப்பணியை துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து தெப்பக்குளம் பகுதியில் நடந்த விழாவில் துணை சுகாதார நிலையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், திருச்சி மாநகராட்சி மண்டல குழு தலைவரும், மாநகர திமுக செயலாளருமான மதிவாணன் மற்றும் கவுன்சிலர் மணிமேகலை தி.மு.க. நிர்வாகிகள் அறநிலையத்துறை அதிகாரிகள் கோயில் அறங்காவலர்கள் பக்தர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில்

# அரியலூர் மாவட்ட ஓ.பி.எஸ். அணியினர் 200 பேர் கழகத்தில் இணைந்தனர்!

அரியலூர், பிப்.9-

அ.தி.மு.க. ஓ.பி.எஸ். அணி அரியலூர் மாவட்டச் செயலாளர் அன்பு.விஜய பார்த்திபன் 26.01.2026 அன்று முதலமைச்சர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில் தன்னை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள் 200க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் அரியலூர் மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு கழக இரு வண்ண ஆடை அணிவித்து அனைவரையும் வரவேற்றார்.

பின்னர் புதிதாக கட்சியில் இணைந்து கொண்டவர்களை வரவேற்று பேசிய அமைச்சர் சா.சி.சிவசங்கர்...

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டினுடைய தன்மானத்தை காக்கின்ற, முதல் தளகர்த்தராக செயல்பட்டு வருகிறார். மோடி தலைமையிலான அரசாங்கம் தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து துரோகம் இழைத்து வருகின்ற வேளையில், அவர்களை தட்டி கேட்கின்றவராக, அவர்களிடத்தில் எதிர்த்து குரல் கொடுக்கிறவராக, தமிழ்நாட்டுடைய உரிமைக்காக குரல் கொடுக்கின்றவராக நம்முடைய முதலமைச்சர் தான் இருக்கிறார்.

இன்றைக்கு மோடி தலைமையிலான ஒன்றிய அரசாங்கம் ஒரு பட்ஜெட்டை தாக்கல் செய்தது. அதில் மக்களுக்கு நன்மை பயக்கின்ற, ஏழை மக்களுக்கான எந்த திட்டத்தையும் அறிவிக்கவில்லை. தமிழ்நாட்டிற்கும் எந்த திட்டத்தையும் அறிவிக்கவில்லை. அதை நம்முடைய முதலமைச்சர்தான், இன்றைக்கு கேள்வி கேட்டிருக்கிறார்.

ஆனால், அ.தி.மு.க.வின் தலைவராக இருக்கின்ற எடப்பாடி பழனிசாமி அதில் வரவேற்பதற்கு எந்த விஷயம் இல்லாவிட்டாலும், அதில் ஏதோ ஒரு விஷயம் இருப்பது போல வரவேற்பு கொடுக்கிறார். காரணம், இன்றைக்கு அவர் வழக்கு சம்பந்தப்பட்டு மாட்டிக் கொண்டிருப்பதால், மோடிக்கு பயந்து கொண்டு போய் அதிமுகவை அங்கு அடமானம் வைத்து விட்டார்.

அ.தி.மு.க. ஒரு காலத்தில் மறைந்த மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர் தலைமையிலும், மரியாதைக்குரிய அம்மையார் ஜெயலலிதா தலைமையிலும்

ஒன்றிய அரசுகளை எதிர்த்து நிற்கின்ற வகையில், மாநில சுயாட்சிக் கொள்கையிலே நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப்போலவே விட்டுக் கொடுக்காமல் இருந்தவர்கள்.

தமிழ்நாட்டில் நீட் தேர்வு நுழையாமல் தடுத்தவர், முத்தமிழர் கலைஞர். அதைப் பின்பற்றி மறைந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள் நீட் தேர்வு தமிழகத்தில் உள்ளே நுழையாமல் வைத்திருந்தார். ஆனால் அவர் மறைந்த பிறகு எடப்பாடி பழனிசாமி ஆட்சிக்கு வந்தவுடன், தமிழ்நாட்டில் நீட் தேர்வு வந்தது. மின்சாரத்தை ஒன்றிய அரசாங்கம் கட்டுப்படுகின்ற உதய் மின் திட்டம் வந்தது.

ஒவ்வொரு துறையும் மத்திய அரசாங்கத்துடைய கைப்பிடிக்குள் கொண்டு போய் வைத்துவிட்டு, இன்றைக்கு நமக்கு வரவேண்டிய நிதி வரவில்லை. நமக்கு வரிப்பணத்தில் பங்கு வரணும், அந்தப் பங்கை ஒரு மாநிலத்திற்கான பங்கை தராமல் ஏமாற்றுகிறார்கள். கல்விக்கு தரவேண்டிய 3500 கோடி தராமல் வைத்துள்ளது மோடி அரசாங்கம்.

ஏனென்று கேட்டால் மும்மொழி கொள்கையை, நீங்கள் கடைபிடிக்க வேண்டும் என்கிறார்கள். நாம் இருமொழி கொள்கையை தான் கடைப்பிடிப்போம் என் அண்ணா அவர்களால் 1967ல் தி.மு.க. முதன்முதல் ஆட்சிக்கு வந்தவுடன் அமல்படுத்தினோம். அதைத்தான் இன்றைக்கும் நாம் பின்பற்றுகிறோம்.

இந்தியாவிற்கு இன்றைக்கு இந்த கொள்கை தான் வழிகாட்டியான கொள்கை என்று பக்கத்து மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகாவில் ஆரம்பித்து மேற்குவங்கம் வரைக்கும், நம்மை பின்பற்றுவதற்கு முன் வருகிறார்கள். ஆனால் எப்படியாவது மீண்டும் இந்தியை நம் மீது திணிக்க வேண்டும் என்று மோடி துடிக்கிறார். அதை எதிர்த்து கேட்ட காரணத்தால், பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டிய நிதி, நம்முடைய பிள்ளைகள் படிப்பதற்கான நிதி அந்த நிதி ரூ.3500 கோடியை கொடுக்கவில்லை.

நாம் வாங்கும் பொருட்களுக்கு ஜி.எஸ்.டி வரி உண்டு. அதில் ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுக்கும் பங்கு இருக்க வேண்டும். அதில் நமக்கு வரவேண்டிய பங்கை ஒழுங்காக தரவில்லை. 100 நாள் வேலைக்கு பணம் தராமல் இருந்து நம்ம எல்லாம் போராடித்தான் அதைக் கேட்க வேண்டிய நிலை இருந்தது. 100 நாள் வேலையை அதற்கான நிதியை குறைத்து, அரசாங்கம் மாநில அரசாங்கம் பணம் தரவேண்டும் என்று மோடி சொல்கிறார்.

நம்முடைய பணத்தை எல்லாம் இன்றைக்கு கொள்ளையடிக்கின்ற அரசாக, மத்திய அரசாங்கம் இருக்கிறது. இதை எதிர்த்து கேட்க வேண்டும் என்றால் நம்முடைய முதலமைச்சர் தான் இன்றைக்கு முதல் ஆளாக நிற்கிறார். ஒருபுறம் அதை செய்தாலும், இன்னொரு புறம் மக்களுக்கான திட்டங்களை தொடர்ந்து நிறுத்தாமல் செய்து வருகிறார். மகளிர் உரிமைத்தொகை தரும்போது எடப்பாடி கிண்டல் பண்ணினார். ஆயிரம் ரூபாய் தர அரசிடம் பணம் உள்ளதா? இவர்கள் மக்களை ஏமாற்ற சொல்கிறார்கள் என்றார் எடப்பாடி பழனிச்சாமி.

இன்று ஒவ்வொரு மகளிருக்கும் ரூபாய் 28000 வங்கி கணக்கில் சென்ற பின்னர், நாங்கள் ஆட்சிக்குள் வந்தால், ரூபாய் 2000 தருகிறோம் என்கிறார் எடப்பாடி பழனிச்சாமி. மக்களை ஏமாற்றுகின்ற முயற்சியில் எப்படியாவது ஒரு வாய்ஜாலத்தை உண்டாக்கி, ஒரு கதையை சொல்லி ஏமாற்றி மக்களை திசை திருப்ப முடியுமா என்று முயற்சி செய்கிறார்.

ஆனால் அவர் கூட்டணியில் இருக்கின்ற அரசாங்கம், மத்திய ஒன்றிய மோடி அரசாங்கம் நமக்கு தமிழ்நாட்டிற்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்கவில்லையெனில் மட்டும், வாய்திறந்து கேட்காமல் அவர்களிடம் கைகட்டிக் கொண்டு எடப்பாடி பழனிச்சாமி இருந்தாலும், அவருடைய உண்மை ரூபத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை மக்களிடத்திலே நாம் கொண்டு சேர்க்க வேண்டும்.

நம்முடைய முதலமைச்சர்தான் மகளிர் உரிமைத்தொகை தருகிறார். நகரப் பேருந்துகளில் விடியல் பயணம், நம் வீட்டு பிள்ளைகள் படிக்க புதுமைப் பெண், தமிழ் புதல்வன் திட்டம் மூலம் மாதம் ரூபாய் 1000 தருகிறார். இது போன்ற திட்டங்கள் இந்தியாவில் வேற எந்த மாநிலங்களும் கிடையாது இன்னும் பல திட்டங்களையும் விரைவில் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடுக்க இருக்கிறார். எனவே அவருடைய கரத்தை வலுப்படுத்துவது நம்முடைய கடமை என உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் ஓ.பி.எஸ். தலைமையிலான அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்பு குழு அரியலூர் மாவட்ட செயலாளர் விஜய பார்த்திபன், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, அசோக சக்கரவர்த்தி, தெய்வ.இளையராஜா, நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சி.லூயிகதிரவன், க. கருப்புசாமி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



கரூர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் கரூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ தலைமை வகித்தார். கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச்செயலாளர் பா. கேசவன் முன்னிலையில், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பி.திலீபன் ஏற்பாட்டில், நடைபெற்றது. பின்னர், கரூர் மாவட்ட கழக தகவல் தொழில்நுட்ப அணி அலுவலகத்தை வி.செந்தில்பாலாஜி திறந்து வைத்தார்.இந்நிகழ்வில், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



மன்னார்குடி ராஜகோபால சுவாமி அரசு கல்லூரியில் நடைபெற்ற வேளாண் விழிப்புணர்வு கண்காட்சியினை தொழில் முதலீட்டு மற்றும் ஊக்குவிப்புத் துறை அமைச்சர் டி. ஆர்.பி. ராஜா துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். வை.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, நகர்மன்ற தலைவர் மன்னை.த. சோழராஜன் மற்றும் அரசு அலுவலர்கள், அதிகாரிகள், வேளாண் பெருமக்கள்,விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

### என்.இளையராஜா – நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.– எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# மயிலாடுதுறையில் “என் ஊர் என் கனவு” மாவட்ட தொலைநோக்கு திட்டம் 2030 கருத்தரங்கம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்!

மயிலாடுதுறை, பிப். 9-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் “என் ஊர் என் கனவு” மாவட்ட தொலைநோக்கு திட்டம் 2030 கருத்தரங்கை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தொடங்கி வைத்தார்.

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் விஜய் திருமண மண்டபத்தில் “என் ஊர் என் கனவு” மாவட்ட தொலைநோக்கு திட்டம் 2030 கருத்தரங்கம் நடைபெற்றது இந்நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் எஸ். ஸ்ரீகாந்த் தலைமை தாங்கினார். தாட்கோ தலைவர் என்.இளையராஜா, மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா.எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு “என் ஊர் என் கனவு” மாவட்ட தொலைநோக்கு திட்டம் 2030 கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசுகையில்

மாநிலத்திற்கான “தொலைநோக்குத் திட்டம் 2030 உத்தி மற்றும் திட்ட ஆவணம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், இளைஞர் தலைவர்கள், துறை சார் வல்லுநர்கள் போன்ற அனைத்து பங்குதாரர்களின் கனவுகள் மற்றும் விருப்பங்களைக் கண்டறியும் “உங்கள் கனவைச் சொல்லுங்கள்” என்ற புதிய திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது.

உங்கள் சொல்லுங்கள் கனவைச் சொல்லுங்கள் திட்டம் பல்வேறு தரப்பினரிடமிருந்து அவர்களின் விருப்பங்களைக் கேட்டறியும் வகையில் கருப்பொருள் சார்ந்த ஆலோசனைகளை உள்ளடக்கியது.

என் ஊர் என் கனவு இது ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படுகிற மாவட்ட அளவிலான நிகழ்ச்சியாகும். அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களை அங்கீகரித்து பாராட்டுவதோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அலுவலர்கள். துறைசார் வல்லுநர்கள், அரசு சாரா நிறுவனங்கள் சேவை மனப்பான்மை கொண்ட தனிநபர்கள் தொழிலதிபர்கள் மற்றும் பிற பங்குதாரர்களை ஒன்றிணைத்து ஆலோசனை செயல்முறை மூலம் “மாவட்ட தொலைநோக்குத் திட்டம் 2030” உத்தி மற்றும் செயல் திட்டம்” தயாரிப்பதே இதன் நோக்கமாகும்.

இதன் தொடர்ச்சியாக மயிலாடுதுறை மாவட்டத்தில் இந்த கருத்தரங்கு நடைபெற்று வருகிறது இந்த கருத்தரங்கில் துறை சார்ந்த வல்லுனர்கள் கருத்துக்கள் மற்றும் பொதுமக்கள் கருத்துகள் கேட்கப்பட்டு “என் ஊர் என் கனவு 2030” என்ற புத்தக வடிவம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த கருத்தரங்கில் பல்வேறு தரப்பினரிடமிருந்து, பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் அரசுக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க அனுப்பி வைக்கப்படும் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

தொடர்ந்து, விளையாட்டுத் துறை, கல்வித்துறை, வேளாண்மைத்துறை, மாற்;றுத் திறனாளிகள் நலத்துறை, மகளிர் திட்டம் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பொன்னாடை போர்த்தி மற்றும் நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்கள்.

முன்னதாக, மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ.5 கோடியே 30 இலட்சம் மதிப்பில் புதிய மின்னணு வாக்குப் பதிவு இயந்திர கிடங்கு கட்டுவதற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சிகளில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) கோகுல்., மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பூங்கொடி, மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெ.க.வீரப்பாண்டியன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை. சௌமியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என். ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன்,எஸ்.செல்வமணி, மாவட்டக் கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், நகரக் கழக செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம. சுப்பராயன, ஒன்றிய கழக செயலாளர்கள் பஞ்சு. குமார், எம். அப்துல் மாலிக், மங்கை எம்.சங்கர், மூவலூர் எம்.மூர்த்தி, என். இளைபெருமாள், அமிர்த. விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், கு.வைத்தியதன், ப.முருகமணி, பொதுக்குழு உறுப்பினார்கள் பி. சிவதாஸ், பி.கென்னடி, நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்ஷத், ஜெ.கபிலன், அ.காந்தி, சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி ராஜசேகர்,

பேரூராட்சி தலைவர்கள் தரங்கம்பாடி சுகுணா சங்கரிகுமரவேல் வைத்தீஸ்வரன் கோயில்பூங்கொடி அலெக்சாண்டர், மணல்மேடு.கண்மணிஅறிவழகன், மயிலாடுதுறை நகர்மன்றத் துணைத்தலைவர் ச.சிவகுமார்முன்னாள் ஒன்றியக் குழு தலைவர்கள் மகேந்திரன், தியாக விஜயேஸ்வரன்,

முத்து தேவேந்திரன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே. மருது, தேசப்பன், தன்டராஜ், ராஜ்குமார், திபாசத்தியேந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சௌ. சர்வோதயன், சத்தி விஜய், ஒன்றிய குழு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கொரடாச்சேரியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்தர்,சேகர் கலியபெருமாள்,பேரூர் கழக செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன், மற்றும் கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் மயிலாடுதுறையில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் பேசினார். உடன் தலைமை கழக சட்டத்துறை துணைசெயலாளர் பெ. ரகு, தலைமை கழக வழக்கறிஞர்கள் பிரபு, சாமுவேல், ஜான்சன் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வி.எஸ்.பிரபாகர், பொதுக்குழு உறுப்பினர்கள் பி. சிவதாஸ், அரசு வழக்கறிஞர்கள் தணிக்கை பழனி, கார்த்திகேயன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பன்னீர்செல்வம், ரகு வர்மா, தியாகராஜன், பிரபு மற்றும் விஜயகுமார் உள்ளனர்.